## ரிதீமாலியத்த பிரதேச சபை
## பதுளை மாவட்டம்

-------------------------------------------

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 ஜுன் 09 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மே 21 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 16 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயம்

எனது அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரிதீமாலியத்த பிரதேச சபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2013 டிசெம்பரின் பொருட்டுப் பெற வேண்டிய அங்கத்தவர் படியாகிய ரூபா 56,500 மீளாய்வாண்டிற்கான வருவாயாகக் கணக்கிலிடப்படாததால் ஆண்டிற்கான பற்றாக்குறை நிதிசார் கூற்றுக்களில் ரூபா 56,500 அதிகரித்துக் காட்டப்பட்டும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் ரூபா 56,500 குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது அமுலாகிய நான்கு வேலைகளது பெறுமதி ரூபா 1,550,061 ஆகும். அதே வேளையில், கடன்கொடுத்தோருக்கான நிதியேற்பாடு மதிப்பிடப்பட்ட பெறுமதியான ரூபா 1,659,027 ஆகக் காட்டப்பட்டிருந்தது. ஆகவே, 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மீதி ரூபா 108,966 அதிகரித்து நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது முடிவடையாத இரண்டு வேலைகளின் பொருட்டு கடன்பட்டோருக்கும் கடன்கொடுத்தோருக்குமான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததால், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 134,000 அதிகரித்து நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள் என்பன முறையே ரூபா 5,834,380 மற்றும் ரூபா 5,718,028 என்பனவாகும்.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

உரித்துறுதிகள், ஒப்படைப்புக் கட்டளைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 26,931,853 பெறுமதியான காணி, கட்டிடங்கள் என்பவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தமது பதவிகளை விட்டு வெளியேறிய 09 ஊழியர்கள் / உத்தியோகத்தர்கள் ஆகியோரிடமிருந்து வருமதியாக உள்ள ரூபா 42,462 ஊழியர் கடன்கள் அறவிடப்படாமைக்கான காரணம் தெரியாது இருந்ததுடன், இலங்கை குடியரசின் தாபன விதிக்கோவையினது XXIV அத்தியாயத்தின் 1:6 மற்றும் 4 ஆம் பிரிவுகளுக்கமைய அவை அறவீடு செய்யப்படவுமில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 1,291,192 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,190,526 ஆகும். இது ரூபா 899,334 சாதகமற்ற வேறுபாட்டைக் காட்டியது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிசார் விளைவுகளின் தேறிய குறைவினது பகுப்பாய்வுடனான மீளாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| **மீண்டுவரும் வருவாய்** | **2013** | **2012** | **வேறுபாடு** | |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| வரி | 114,286 | - | 114,286 | |
| வாடகை | 2,129,205 | 1,291,790 | 837,415 | |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 626,125 | 786,998 | (160,873) | |
| சேவைக் கட்டணம் | 544,956 | 679,700 | (134,744) | |
| பிடிஆணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 195,759 | 1,613,554 | (1,417,795) | |
| ஏனையவருவாய் | 690,902 | 479,968 | 210,934 | |
| வருவாய்க்கான உதவி | 9,058,667 | 5,977,169 | 3,081,498 | 2,530,721 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் படிகளும் | 8,882,849 | 6,149,551 | (2,733,298) | |
| பயணச் செலவினம் | 288,605 | 205,422 | (83,183) | |
| வழங்கலும் உபகரணமும் | 1,734,042 | 1,462,175 | (271,867) | |
| மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பராமரித்தலும் | 761,417 | 508,295 | (253,122) | |
| போக்குவரத்து, பாவனை மற்றும் ஏனைய சேவைகள் | 199,880 | 186,542 | (13,338) | |
| வட்டிக் கொடுப்பனவு, பங்கிலாபம், மிகையூதியம் | 58,342 | 66,112 | 7,770 | |
| உதவிப்பணம், உதவுதொகை, நிவாரணத் தொகை | 100,000 | - | 100,000 | |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன்கள் மற்றும் பணிக்கொடை | 43,573 | 60,556 | 16,983 | (3,430,055) |
| | | | பாதகமான வேறுபாடு | (899,334) |

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 1988, விதி இலக்கம் 67க்கமைய சபையின் எல்லைக்குட்பட்ட வர்த்தக நிறுவனங்களிலிருந்து அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிடுதற் பொருட்டு அவற்றை இனங்காண்பதற்கான கணிப்பீடு ஒன்று ஆண்டின் ஆரம்பத்தில் இடம்பெற வேண்டும். எவ்வாறாயினும், 2013 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரக் கட்டணக் கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெறவேண்டிய கைத்தொழில்கள், வியாபார நிலையங்கள் போன்றவற்றை இனங்காண்பதற்கான கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும் பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 485,499 |
| முத்திரைக் கட்டணம் | 432,950 |
| | 918,449 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

வீதிகளில் கொங்கிரீட் இடும் வேலை முடிவடைந்ததன் பின்னரே அவற்றிற்கான பெறுமதியை 2013 ஆம் ஆண்டிற்கான கிராமிய வீதி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மக நெகுமவின் கீழ் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மீளளிப்புச் செய்யும். எனினும், ரூபா 4,000,000 பெறுமதியான 8 வீதிகளுக்கு மீளாய்வாண்டு டிசெம்பர் 31 வரை உடன்படிக்கைகளேனும் கைச்சாத்திடப்படாதிருந்தன.

### 3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

(அ) இராணுவச் செயற்பாடுகளுக்கென பெறப்பட்ட 53 - 5072 இலக்க கெப் வண்டி 2008 மார்ச் 18 அன்று சபைக்கு திருப்பி வழங்கப்பட்டிருந்தது. அந்நாட் தொடக்கம் அதனைப் பழுதுபார்க்கவோ அல்லது பொருத்தமானவாறு கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது சபை வளாகத்தில் அது பயனற்றிருந்தது.

(ஆ) 2005 மார்ச் 01 அன்று பண்டாரவெளை பிரதேச சபையால் வழங்கப்பட்ட 39 - 1387 இலக்க முச்சக்கர வண்டி 2012 மார்ச் தொடக்கம் சபை வளாகத்தில் எதுவித பயனுமற்றிருந்தது.

(இ) சபைக்குரிய இரு உத்தியோகபூர்வ விடுதிகள் பயன்படுத்தப்படாது பாழடைந்திருந்தன.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) 2013 டிசெம்பரில் 4 வேலைகளுக்கு ரூபா 310,782 முற்பணமாக வழங்கப்பட்டபோதும், 2014 ஜுன் மாதத்திலும் வேலைகள் முடிவடையாது இருந்தன.

(ஆ) ஒப்பந்தங்கள் தொடர்பாக சபைக்கும் சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம், 6 வேலைகளுக்கு 8 சந்தர்ப்பங்களில ரூபா 2,099,079 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்படி கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் ஏனைய வெளியார்களது பெயர்களுக்கே வரையப்பட்டிருந்தன.

### 3.4 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையானது திண்மக் கழிவு முறைமை ஒன்றை அமுல்படுத்தாது சேரிக்கப்படும் குப்பைகளை முறையற்றவாறு அந்தா உல்பத்த சந்தை நடைபெறும் இடத்தே உள்ள குழி ஒன்றில் குவித்தவாறிருந்தது.

## 4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

2013 ஆம் ஆண்டின் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாயும் செலவினமும் ஒப்பிடப்பட்டபோது பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| மீண்டுவரும் வருவாய் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளவாறானது | வேறுபாடு | வேறுபாட்டினது சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| வரி | 52,000 | 114,286 | 62,286 | 119.7 |
| வாடகை | 139,110 | 2,129,205 | 1,990,095 | 143.0 |
| சேவைக் கட்டணம் | 682,000 | 544,956 | 137,044 | 20.0 |
| பிடிஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 146,200 | 195,759 | 49,559 | 33.8 |
| ஏனைய வருவாய் | 263,750 | 690,903 | 427.153 | 161.9 |
| வருவாய்க்கான உதவி | 7,423,825 | 9,058,667 | 1,634,842 | 22.0 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் படியும் | 7,649,825 | 8,882,850 | 1,233,025 | 16.1 |
| வழங்கலும் உபகரணமும் | 1,404,500 | 1,734,042 | 329,542 | 23.4 |
| மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பராமரித்தலும் | 472,000 | 761,417 | 289,417 | 61.3 |
| வட்டி, பங்கிலாபம், மிகையூதியக் கொடுப்பனவு | 70,000 | 58,342 | 11,658 | 16.6 |
| உதவிப்பணம், உதவு தொகை, நிவாரணத் தொகை | 90,000 | 100,000 | 10,000 | 11.1 |
| ஒய்வூதியம், ஓய்வூதிய நலன், பணிக்கொடை | 25,000 | 43,573 | 18,573 | 74.2 |

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருவாய் நிர்வாகம்

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்